தினமணி

# இன்றைய வேளாண் செய்திகள்

## அந்தநல்லூரில் சம்பா முன்பருவ முனைப்பு முகாம் விவசாயிகளுக்கு அழைப்பு

அந்தநல்லூர் வட்டாரத்தில் நடைபெறவுள்ள சம்பா முன்பருவ முனைப்பு முகாமில் பங்கேற்க விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து வட்டார வேளாண் உதவி இயக்குனர் பால்ராஜ் வெளியிட்டுள்ள அறிக்கை: மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. நமக்கு கிடைக்கும் தண்ணீரை பயன்படுத்தி வேளாண்துறையின் தொழில்நுட்ப திட்டங்களின் மூலம் இரட்டிப்பு மகசூல் பெறவும், வருவாயை 3 மடங்காக பெருக்கி விவசாயிகள் வளர்ச்சி காண வேண்டும். அந்த வகையில் அந்தநல்லூர் வட்டாரத்தில் தற்போது விவசாயிகள் சம்பா சாகுபடிக்காக தங்களது நிலங்களை தயார் செய்து வருகின்றனர். இதற்காக வட்டாரத்திற்கு உட்பட்ட அனைத்து வருவாய் கிராமங்களிலும் நெல் சாகுபடி குறித்த உயர் தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு எடுத்துரைக்கும் வகையில் சம்பா முன்பருவ முனைப்பு முகாம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதில் அனைத்து கிராம விவசாயிகளும் தவறாது பங்கேற்று பயன் பெற வேண்டும். மேலும் அந்தநல்லூர், திருவானைக்கோவில் விரிவாக்க மையங்களில் ஆந்திரா பொன்னி நெல்விதை போதியளவு இருப்பு வைக்கப்பட்டு வினியோகம் செய்யப்படுகிறது. விவசாயிகள் மானிய விலையில் விதைகளை பெற்று பயனடையலாம்.

## பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு சான்று பெற்ற விதை இருப்பு உள்ளதா? அதிகாரி ஆய்வு

திருச்சி,: பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால் திருச்சி மாவட்டத்தில் சம்பா பருவத்துக்கு தேவையான சான்று பெற்ற விதை இருப்பு வைக்கப்பட்டுள்ளதா என்று கோவை இணை இயக்குனர் ஆய்வு செய்தார். திருச்சி மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் உணவு தானிய உற்பத்திக்கு 145 லட்சம் மெ.டன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உணவு தானிய உற்பத்திக்கு மிகவும் அடிப்படை தரமான சான்று பெற்ற விதைகளே ஆகும். அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் தனியார் விதை விற்பனையாளர்கள் மூலம் விவசாயிகளின் தேவைக்கேற்ப சான்று பெற்ற விதைகள் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. பாசனத்துக்காக வாய்க்கால்களில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால் திருச்சி மாவட்டத்தில் நடப்பு சம்பா பருவத்துக்கு தேவையான சான்று பெற்ற விதைகள் தேவையான

அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளதா என்று கோவை விதை சான்று இணை இயக்குனர் பழனிசாமி நேற்று ஆய்வு செய்தார். அப்போது போதுமான அளவு விதை நெல் இருப்பு உள்ளதா என்று கேட்டறிந்தார். மேலும் விதை சான்று நடைமுறை குறித்து தமது தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தி கொள்ளுமாறும், ஒவ்வொரு நெல் ரகத்துக்கான தனித்துவமான குணாதிசயங்களை பற்றி முழுமையாக அறிந்து கொள்ளுமாறும் விதை சான்று அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். பின்னர் மண்ணச்சநல்லூரில் உள்ள விதை சுத்திகரிப்பு நிலையத்தில் ஏடிடி 43 விதை நெல் சான்று பணியை பார்வையிட்டார். இதைதொடர்ந்து லால்குடி வட்டாரம் மணக்காலில் உள்ள தங்கப்பா என்ற விவசாயியின் 6 ஏக்கர் ஏடிடி 43 நெல் விதைப்பண்ணையை பார்வையிட்டார். ஆய்வின்போது திருச்சி விதை சான்று உதவி இயக்குனர் எழில் அரசு, விதை சான்று அலுவலர்கள் ரங்கராஜன், சுரேஷ்குமார் உடனிருந்தனர். ஆய்வுக்கு பின்னர் பழனிசாமி கூறுகையில், திருச்சி மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் இதுவரை 328 எக்டேர் விதை பண்ணை பதிவு மேற்கொ ள்ளப்பட்டுள்ளது. 732 மெ.டன் விதை சான்று செய்யப்பட்டுள்ளது. இலக்குக்கு குறைவின்றி நடப்பு சம்பா பருவத்தில் சாதனை செய்யப்படவுள்ளது. திருச்சி மாவட்ட அனைத்து விவசாயிகளும் சான்று பெற்ற விதைகளை வாங்கி சாகுபடி செய்வதோடு இரட்டிப்பு மகசூல் பெற்று மும்மடங்கு லாபம் பெறலாம் என்றார்.

## <u>மாவட்டத்தில் பரவலாக பெய்கிறது காவேரிப்பாக்கத்தில் 36 மி.மீ. மழை</u>

வேலூர்,: வேலூர் மாவட்டத்தில் போதிய பருவமழை பெய்யாதது தால் பல இடங்களில் கடும் குடிநீர் கட்டுப்பாடு நிலவி வருகிறது. குடிநீருக்காக மக்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் கடந்த சில நாட்களாக மாவட்டம் முழுவதும் பரவலாக லேசான மழை பெய்து வருகிறது. லேசான தூறலுடன் தொடர்ந்து மழை பெய்கிறது.

இந்நிலையில் நேற்று மாலை 6 மணியளவில் வேலூரிலும் அதன் சுற்றுப்புற பகுதிகளிலும் லேசான மழை பரவலாக பெய்தது. இதேபோல் மாவட்டம் முழுவதும் மேகம் மூட்டத்துடன் காணப்பட்டது. ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்தது. கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழைபெய்து வருவதால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தொடர்ந்து இதேபோல் மழை பெய்தால் நிலத்தடி நீர்மட்டம் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மாவட்டத்தில் நேற்று முன்தினம் பெய்த மழை அளவு (மில்லி மீட்டரில்): வேலூர் - 4.2, அரக்கோணம் - 17, சோளிங்கர் - 5 வாலாஜா -28 ஆற்காடு - 8, குடியாத்தம் - 2, வாணியம்பாடி - 1, கவேரிப்பாக்கம் -36.6, மேல் ஆலத்தூர் - 5.2, ஆலங்காயம் - 2.4, ஆம்பூர் - 28, காட்பாடி -4.6.

**<u>உளுந்தூர்பேட்டை பகுதியில் வேப்பங்கொட்டை சேகரிக்கும் பணி தீவிரம்</u>**

உளுந்தூர்பேட்டை, : உளுந்தூர்பேட்டை மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் அதிக அளவு விவசாயம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. கடந்த சில மாதங்களாக போதிய மழை இல்லாததால் மானாவாரியாக பயிர் செய்து வரும் விவசாய கூலித் தொழிலாளர்கள் போதிய விவசாய வேலை கிடைக்காததால் வேப்பங்கொட்டை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வந்தனர். கிராமப்பகுதியில் இருந்து சேகரிக்கப்படும் வேப்பங்கொட்டைகள் உளுந்தூர்பேட்டையில் உள்ள மொத்த வியாபாரிகளிடம் விற்பனை செய்து வருகின்றனர். கடந்த ஒரு மாத காலமாக இந்த பணியில் ஈடுபட்டு வரும் விவசாய கூலித் தொழிலாளர்கள் மற்றும் வயதான மூதாட்டிகள் கிலோ ரூ.6 முதல் ரூ.8 வரையில் விற்பனை செய்து வருகின்றனர். விவசாயத்தில் முக்கிய பங்கு வகிப்பது வேப்பமரம். இதில் உள்ள இலை, பூ, பட்டை மற்றும் வேப்பங்கொட்டை அனைத்தும் விவசாய பணிகளுக்கும், பூச்சிக்கொல்லி மருந்துகள் தயாரிக்கவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. வேப்பம் இலையில் இருந்து தயாரிக்கப்படும் சாறு மற்றும் வேப்பங்கொட்டையில் இருந்து தயாரிக்கப்படும் எண்ணெய் விவசாய பயிர்களுக்கு பயன்படுத்தப்படுவதால் பயிர்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லாததுடன் நன்மை செய்யும் பூச்சிகள் அழிந்து வருவதும் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. வேப்பங்கொட்டையில் இருந்து தயாரிக்கப்படும் மருந்துகள் மூலம் விவசாயத்திற்கு கெடுதல் செய்து வரும் 350 வகையான பூச்சிகளையும், 15 வகையான பூஞ்சாணங்களையும், 12 வகையான நாற்புழுக்களையும், 2 வகையான வைரஸ் கிருமிகளையும் கட்டுப்படுத்தக்கூடியதாக உள்ளது. விவசாயிகளின் மருந்தகம் எனப்படும் வேப்பமரம் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் வந்த சுனாமியின் போது வேரோடு சாய்ந்ததால் தற்போது வேப்பங்கொட்டை வரத்து குறைந்து காணப்படுகிறது என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். நெல் மற்றும் மணிலா உள்ளிட்ட முக்கிய விவசாய பயிர்களுக்கு அதிக அளவு வேப்பங்கொட்டை மற்றும் வேப்பம் இலையில் இருந்து தயாரிக்கப்படும் மருந்துகள் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளதால் இதனை தனியார் மருந்து கம்பெனிகள், உரம் தயாரிக்கும் கம்பெனிகள் அதிக அளவு உளுந்தூர்பேட்டைக்கு வந்து வாங்கி செல்கின்றனர். உளுந்தூர்பேட்டையில் இருந்து சேகரிக்கப்படும் வேப்பங் கொட்டைகள் சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சி உள்ளிட்ட பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### தர்மபுரி விவசாயிகளுக்கு மானிய விலை விதைகள்

தர்மபுரி: தர்மபுரி விவசாயிகளுக்கு, மானிய விலையில் விதைகள் வழங்கப்பட உள்ளது. இதுகுறித்து, தர்மபுரி வேளாண் அதிகாரிகள் கூறியதாவது: தர்மபுரி வட்டார விவசாயிகளுக்கு நடப்பு காரீப் பருவத்துக்கு பயன்படும் வகையில், தரமான சான்று பெற்ற நெல், உளுந்து, துவரை, கேழ்வரகு, நிலக்கடலை, காராமணி விதைகள் மானிய விலையில் வழங்கப்பட உள்ளது. இதற்காக, தர்மபுரி துணை வேளாண் விரிவாக்க மையம், கிருஷ்ணாபுரம் வேளாண் விரிவாக்க மையங்களில் போதிய அளவு விதைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இந்த விதைகள், பல்வேறு மானிய திட்டங்கள் மூலம் தர்மபுரி வட்டார விவசாயிகளுக்கு வழங்கப்படும். நெல் மற்றம் மணிலா பயிர்களுக்கு, கந்தக சத்தினை அளிக்கவும், மண்ணில் உள்ள கலர் உலர் நிலங்களுக்கு, ஜிப்சம், 50 சதவீதம் மானிய விலையில் வழங்கவும் போதுமான இருப்பு வைக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர்களையோ, தர்மபுரி வேளாண்மை விரிவாக்க மையத்தையோ அணுகி பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு, அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### வைகை அணையீல் நீர் திறப்பு

தேனி: தேனி நகரின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் விதமாக வைகை அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது.தொடர்ந்து இன்று முதல் 17-ம் தேதி வரையில் தண்ணீர் திறந்து விடப்பட உள்ளது. முதல்நாளன்று ஆயிரத்து 500 கன அடியாகவும், 15-ம் தேதி ஆயிரம் கன அடியாகவும், 16-ம் தேதி 500 கன அடியாகவும் குறைக்கபடும் என அதிகாரிகள் தெரிவீத்துள்ளனர். அதேபோல் பவானி அணையும் பாசனத்திற்காக நாளை திறக்கப்பட உள்ளது.

## சம்பா பருவத்தில் அதிக மகசூல் விதை ஆய்வு அதிகாரி யோசனை

கரூர்: காவிரி பாசன பகுதி விவசாயிகள், சம்பா பருவத்தில் அதிக மகசூல் பெற, தரமான நெல் விதைகளை பயன்படுத்துமாறு, விதை ஆய்வு துணை இயக்குனர் ரமேஷ்பாபு தெரிவித்தார். அவர் தெரிவித்தாவது:

நெல் விதை கொள்கலன்களில், சான்று அட்டை அல்லது உண்மை நிலை அட்டை பொருத்தியிருக்க வேண்டும். சான்று அட்டையில் பயிர், ரகம், குவியல் எண், முளைப்பு திறன் அளவு, காலாவதி நாள் தெளிவாக குறிப்பிட்டிருக்க வேண்டும். உற்பத்தியாளர்கள் கையொப்பம் இடம் பெற்றிருக்க வேண்டும். விற்பனை ரசீது கட்டாயம் கேட்டு பெற வேண்டும். ரசீதில் குவியல் எண், காலாவதி நாள் குறிப்பிட்டிருக்க வேண்டும். வழிமுறைகளை கடைப்பிடித்து தரமான விதைகளை வாங்கி விவசாயிகள் அதிக மகசூல் பெற கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். விதை உரிமம் இல்லாமல் இருப்பு வைத்து விற்பனை செய்தால், விதை சட்டத்தின்படி சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும். விவசாயிகளுக்கு விதை விற்பனை செய்யும் போது கட்டாயம் விற்பனை ரசீது வழங்க வேண்டும். விற்பனை ரசீதில் விவசாயிகளிடம் கையொப்பம் பெற வேண்டும். காலாவதி விதையினை இருப்பு வைத்தாலும், விவசாயிகளுக்கு விற்பனை செய்தாலும் விதை சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். விற்பனை நிலையத்தில் தகவல் பலகையில் விதை விவரம் மற்றும் இருப்பு விவரம் கண்டிப்பாக பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
இவ்வாறு அவர் கூறினார்.

## தோட்டக்கலை துறையினருக்கு அறுவடை பரிசோதனை பயிற்சி

திருவாரூர்: திருவாரூர் மாவட்டத்தில், பயிர் அறுவடை பரிசோதனை மேற்கொள்வது என்பது குறித்து, வேளாண்மை மற்றும் தோட்டக்கலை துறை அலுவலர்களுக்கு பயிற்சி முகாம், திருவாரூர் கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் மதிவாணன் தலைமையில் நடந்தது. இதில், மண்டல புள்ளியியல் இணை இயக்குனர் காமராஜ், துணை இயக்குனர் ராமதாஸ், வேளாண்மை இணை இயக்குனர் மயில்வாகணன், துணை இயக்குனர் நடேசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர். உற்பத்தியை, மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் கணக்கிடுவது தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தில் மழை, வெள்ளம் மற்றும் வறட்சி காலங்களில், பாதிப்பை அறிந்து விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவது குறித்து பயிற்சியளிக்கப்பட்டது. வேளாண்மை மற்றும் தோட்ட கலை துறையை

சார்ந்த உதவி இயக்குனர்கள், அலுவலர்கள், உதவி அலுவலர்கள், கள பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

## அணைகளின் நீர்மட்டம்

தேனி : பெரியாறு 124.10 (152) அடி. நீர் வரத்து 1090 கன அடி. வெளியேற்றம் 1311 கன அடி. வைகை 47.11(71)அடி. நீர் வரத்து 834 கன அடி. நீர் திறப்பு 40 கன அடி. மஞ்சளாறு 29.45 (57) அடி. நீர் வரத்து இல்லை, வெளியேற்றம் 8 கன அடி. சோத்துப்பாறை 44.60(126.28) அடி. வரத்து இல்லை. வெளியேற்றம் 3 கன அடி.மழையளவு (மி.மீ,): பெரியாறு 1, தேக்கடி 1.2.

## நெற்பயிரில் பூச்சி தாக்குதல்; கட்டுப்படுத்த ஆலோசனை

கூடலூர் : குறுவை நெற்பயிரில் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தும் விதம் குறித்து, விவசாயத்துறை உதவி இயக்குனர் அசோகன் ஆலோசனை வழங்கியுள்ளார். அவர் கூறியதாவது: நடவு நட்ட ஆரம்ப காலங்களில் 10 நாட்களுக்கு ஒரு முறை நூல் அளவு வெடிப்பு தோன்றும் போது, 2.5 செ.மீ., நீரை பாய்ச்ச வேண்டும். இதனால், தூர்கள் அதிகம் பெருகி விளைச்சல் அதிகமாகும். இக்குறுவை நெல் சாகுபடியில் பூச்சி தாக்குதல் ஏற்படும் போது உடனடியாக கட்டுப்படுத்த வேண்டியது அவசியமாகும். தண்டு துளைப்பான் தாக்குவதால், நடுக்குறுத்து காய்ந்து விடும். இதற்கு தொடர்ச்சியாக வயலில் தண்ணீர் தேங்குவதை தவிர்க்க வேண்டும். மேலும், முட்டை ஒட்டுண்ணிகளான டிரைக்கோகிரம்மா ஜப்பானிக்கம் ஏக்கருக்கு 5 மி.லி., தெளிக்க வேண்டும். வெட்டுப்புழு தாக்கும் போது மாடு புல் மேய்ந்தது போல் இருக்கும். இவ்வாறு இருந்தால் மாலத்தியான் 5 சதவீதம், 20 கி.. ஹெக்டருக்கு என்ற அளவில் தூவ வேண்டும். இலை சுருட்டுப்புழு தாக்குவதால், இலைகள் வெண்மையாக மாறி காய்ந்து விடும். தீவிர தாக்குதலின் போது, முழு நெல் வயலும் வெண்மையாக காய்ந்து விடும். இதற்கு டிரைக்கோடெட்மா கிலோனிஸ் பயிர் நடவு செய்து 37, 44 மற்றும் 51 நாட்களில் மூன்று முறை, 5 சி.சி., அளவில் முட்டை ஒட்டுண்ணிகளை விட வேண்டும். மேலும் புகையான், கதிர் நாவாய் பூச்சி தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனைக் கட்டுப்படுத்த உடனடியாக விவசாயத்துறை அதிகாரிகளிடம் ஆலோசனை பெறுவது

அவசியமாகும். நீர் மற்றும் பூச்சி நிர்வாக முறைகளை கடைப்பிடித்து, விவசாயிகள் அதிக அளவில் மகசூல் பெற வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## புதுமைகள் செய்யும் புதுச்சேரி விவசாயி

கலை, அறிவியல் உள்ளிட்ட துறைகளில் சிறந்து விளங்கும் பல அறிஞர்களுக்கு இந்திய அர சால் வழங்கப்படும் பத்மஸ்ரீ விருதை, ஒரு விவசாயியும் வாங்க முடியும் என நிருபித்து காண்பித்தவர் புதுச்சேரி விவசாயி வெங்கடபதி. புதுச்சேரியை அடுத்த 6 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கூடப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி வெங்கடபதி. கடந்த 1970 ஆண்டுகளில் 10 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்து நஷ்டம் ஏற்பட்டதால், வாழ்க் கையை முடித்து கொள்ளலாம் என தற்கொலை செய்ய முடிவு செய்தார். மனைவி அறிவுரையால் தற்கொலை முடிவைக் கைவிட்ட வெங்கடபதி, தேனி மாவட்டம் பெரியகுளத்தில் உள்ள தோட்டக்கலை பயிற்சி மையத்திற்குச் சென்றார். அங்குப் பணியாற்றிய தனது முன்னாள் தோழர் சம்பந்தமூர்த்தியை சந்தித்து, விவசாயத்தில் தோல்வி அடைந்ததால் வாழ்கைக்கு வழிகாட்டுமாறு கோரினார். வெங்கடபதியின் கையில், 10 கனகாம்பரம் செடிகளை கொடுத்து அனுப்பினார் சம்பந்தமூர்த்தி. வழக்கமாக கனகாம்பரம் வெளிர் ஆரஞ்சு கலரில் இருக்கும். ஆனால், வெங்கடபதி வளர்த்த கனகாம்பரம் வித்தியாசமாக இருந்தது. வெங்கடபதி வளர்த்த கனகாம்பர பூவிற்கு மார்கெட்டில் கடும் கிராக்கி ஏற்பட்டது. இதனால், பெரிய அளவில் உற்பத்தி செய்ய முடிவு செய்து, வெங்கடபதி கனகாம்பர செடிகளை வளர்க்க துவங்கினார். ஒரு லட்சம் செடி உற்பத்தி: அப்போது புதுச்சேரியில் அரசு நடத்திய மலர் கண்காட்சியில், தனது 10 கனகாம்பர செடிகள் தலா 500 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டதைக் கண்ட வெங்கடபதி குறைந்த விலையில் 5 ரூபாய்க்கு கனகாம்பரம் செடிகளைத் தருவதாக தெரிவித்தார். வேளாண் துறையும் அடுத்த நாளே 1 லட்சம் கனகாம்பரம் செடிகளை உற்பத்தி செய்ய 5 லட்சம் ரூபாய் கொடுத்தது. திடீரென இவ்வளவு செடிகளை உற்பத்தி செய்ய முடியாததால் மீண்டும் பெரியகுளம் புறப்பட்டார் வெங்கடபதி. அங்கு ஒரு செடியில் 3 கிளையில் பதிகம் செய்தால், மூன்று செடிகளை உற்பத்தி செய்ய முடியும். ஆனால் செடியின் ஒவ்வொரு கணுவிலும் பதிகம் செய்யும் முறை அறிந்து, ஒரு லட்சம் செடிகளைத்

தயார் செய்து கொடுத்தார். வண்ண வண்ண கனகாம்பரம்: ஒரே மாதிரியான நிறத்தில் கனகாம்பரம் ஏன் பூக்க வேண்டும் என்ற எண்ணம் உதித்தது வெங்கடபதிக்கு. மீண்டும் பெரியகுளத்திற்குப் புறப்பட்டார். அங்கு, பல நிறங்களில் கனகாம்பரம் செடிகளை உற்பத்தி செய்வது எப்படி என அறிந்து கொண்டார். கனகாம்பரம் செடிகளின் மூலக்கூறுகளில் மாற்றம் செய்ய வேண்டும், அதிற்கு காமா கதிர்வீச்சை பயன்படுத்த வேண்டும் என அறிந்தார்.காமா கதிர்களை வழங்க கல்பாக்கம் அணு உலை உதவியது. முதலில் காமாக்கதிர்களைப் பாய்ச்சிய போது, செடிகள் அனைத்தும் அழிந்துவிட்டது. பின்பு, ஒவ்வொரு செடிக்கும், ஒவ்வொரு அளவில் காமாக்கதிர்களை பாய்ச்சும் போது, ஒரு செடி மட்டும் பல வண்ண மலர்களை பூக்க ஆரம்பித்தது. அந்த புதிய கனகாம்பரம் செடியில் இருந்து, கலப்பினம் செய்து சிவப்பு, கரும் சிவப்பு, ஆரஞ்சு, நீலம் உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட பல வண்ண நிற இனங்களை கண்டறிந்தார். இவரது கனகாம்பர செடி கண்டுபிடிப்பிற்கு நாடு முழுவதும் இருந்து வாழ்த்துகள் குவிந்தன. மரத்தின் மீது ஆர்வம்: பூப்பறிப்பதிற்கு ஆட்கள் பற்றாக்குறையால், பூச்செடியில் புதிய இனங்களைக் கண்டுபிடிப்பதை விடுத்து, மரத்தின் மீது ஆர்வத்தைத் திருப்பினார். அப்போது, சாதாரணமாக ஒரு ஏக்கரில் பயிரிடப்படும் சவுக்கு மரம் 40 டன் அளவில் மகசூல் தரும். ஆனால் சவுக்கு மரத்தில் ஆண்,பெண் மரங்களைக் கண்டறிந்து, வெங்கடபதி, அதில் பல கலப்பினம் செய்து வீரிய ரக சவுக்கு மரத்தைக் கண்டுபிடித்தார். இந்த சவுக்கு மரத்தை ஒரு ஏக்கரில் பயிரிட்டால், 200 டன் அளவு மகசூல் தரக்கூடியது. இந்தியாவின் பல பகுதியில் தற்போது பயிரிடப்பட்டு வருகிறது. புதிய கண்டுபிடிப்புகள்: பேரிக்காய் சுவை கொண்ட கொய்யா இனத்தையும், நெய்மணம் கமழும் மிளகாய் என இவரது கண்டுபிடிப்பு பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. தொடர்ந்து பல ஆராய்ச்சிகளிலும் ஈடுபட்டு வருகிறார். மத்திய அரசு 2012ம் ஆண்டு பத்மஸ்ரீ விருது வழங்கியது. இவரது ஆராய்ச்சி பணியில் மகள் லட்சுமி பெரும் பங்காற்றி வருகிறார். லட்சுமியின் முயற்சியால், மூணாறு மலைப்பகுதியில் கிடைத்த காரம் மிகுந்த, மிளகாய் ரகத்தைக் கொண்டுவந்து, நாட்டு மிளகாய் இனத்துடன் கலப்பினம் செய்து, நெய் மணம் கமழும் மிளகாய் இனம் கண்டுபிடிக்கப்பிடிக்கப்பட்டுள்ளது.

## சின்ன சின்ன செய்திகள்

புளியங்கொட்டையின் தொழிற்சாலைப் பயன்கள்: சராசரியாக புளியம்பழம் 55 சதவீதம் சதைப்பற்றுள்ள பகுதியையும், 34 சதவீதம் கொட்டையையும், 11 சதவீதம் நாறும், ஓடும் கொண்ட பகுதியாகும். ஒட்டும் பசை, பெக்டின், கால்நடைத்தீவனம், புரதம் ஆகியவை தயாரிக்க புளியங்கொட்டையின் உள் அமைந்த பருப்புப்பொடி ஆதாரமாக அமைகிறது. பெக்டின் - ஜாம், ஜெல்லி தயாரிக்க பயன்படுகிறது. வியாபார ரீதியாக பழங்களிலிருந்தும், பழத்தோலிலிருந்தும் தயாரிக்கப்படுகிறது. ஒட்டும் பசை - புளியங்கொட்டையினுள் உள்ள பருப்புப் பொடியில் இருமடங்கு தண்ணீரைச் சேர்த்து 5 சதவீதம் குளுக்கோஸ், 12 சதவீதம் சோடியம் பைகார்பனேட் சேர்த்து ஒட்டும்பசை தயாரிக்கப்படுகிறது. அறை தடுப்புச் சுவர்கள் அமைக்க பயன்படும். அட்டைகள் தயாரிக்க ஒட்டும் பசை பயன் படுத்தப்படுகிறது. தோல்பதனிடும் நிறமி - தோலில் உள்ள டேனின் என்ற நிறமி தண்ணீரில் கரையக்கூடிய பாபிடீனாரிக் கூட்டுப் பொருளாகும். டேனின் எதிர் ஆக்ஸி காரணியாகப் பயன்படுகிறது. புளியங்கொட்டையில் மேற்புற ஓட்டில் 20-32 சதவீதம் வரை டேனின் உள்ளது. இது தோல் பதனிடு தலில் நிறமியாகப் பயன்படுகிறது. புளியங்கொட்டை எண்ணெய் - புளியங் கொட்டை சுமார் 4 முதல் 6 சதவிகித எண்ணெய் சத்தைக் கொண்டுள்ளது. ஹெக்ஸேன் அல்லது குளோரோபார்ம் மெத்தனால் கலந்த கலவை கொண்டு எண்ணெய் பிரித்தெடுக்கப்படுகிறது. இன்றியமையா கொழுப்பு அமிலங்களான பால்சிடிக், ஒலியிக், லின்னோலியிக், ஈகோசனாயிக் அமிலங்கள் புளியங்கொட்டை எண்ணெயினுள் கிடைக்கின்றன. கடலை எண்ணெய்க்கு நிகரான தன்மையும் கொண்டுள்ளது. புரதம் - பஞ்ச காலங்களில் புளியங்கொட்டை உணவாக பயன்படுத்தப் பட்டதற்கான வரலாறுகள் உண்டு. 13 முதல் 20 சதவீதம் வரை புரதச்சத்து உள்ளது. திரியோன்னன், டிரிப்டோபேன் தவிர மற்ற அமினோ அமிலங்கள் புளியங்கொட்டையில் உள்ளன. மெத்தி யோனைன் கன்சலைசின் ஆகிய அமிலங்கள் முறையே 113-475 மில்லி கிராம் என்ற அளவில் புளியங் கொட்டையில் அமைந்த ஒரு கிராம் மொத்த நைட்ரஜனில் உள்ளது. எனவே புளியங்கொட்டையினுள் உள்ள பருப்பை உணவாகப் பயன்படுத்துவதன் மூலம் புரதம் நிறையப்பெற்று புரதக்குறைபாட்டினால் ஏற்படும் நோய்களைத் தவிர்க்கலாம். புளியங்கொட்டை கோழித்தீவனம்: புளியங்கொட்டை புரதம், மாவு,

எண்ணெய் சத்துக்களைக் கொண்டிருப்பதால் கால்நடை மற்றும் கோழித்தீவனமாகப் பயன்படுத்தலாம். எரிகட்டிகள் : புளியங்கொட்டையின் மேற்புற ஓடுடேனின் பிரித்தெடுக்கப் பட்ட பின்பு சுமார் 13 முதல் 20 சதவிகிதம் வரை நார்ச்சத்து கொண்டுள்ளது. இதனுடன் பழ மேற்புற ஓடும் ஒட்டும் பசையும் கொண்டு அதிக அழுத்தத்தில் எரிகட்டிகள் தயாரிக்கலாம். புளியங் கொட்டையிலிருந்து உணவுப்பொருட்களும் பாலிமர் பொருட்களும் தயாரிக்க பலவிதமான ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. (தகவல் : ந.கற்பூர சுந்தரபாண்டியன், முனைவர் பெ.ராஜ்குமார், வேளாண் பதன செய் பொறியியல் துறை, வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருச்சிராப்பள்ளி-620 008. போன்: 0431 - 290 6100) விலை முன் அறிவிப்பு : ஆடிப்பட்டத்தில் விளைவிக்கப்படும் மக்காச்சோளம் நவம்பர் மாதத்தில் அறுவடைக்கு வரும். கடந்த 20 ஆண்டுகளில் உடுமலை சந்தைகளில் விற்பனை செய்யப்பட்ட விலைகளை ஆய்வு செய்ததின் அடிப்படையில் நவம்பர் மாதத்தில் ஒரு குவிண்டால் மக்காச்சோளம் ரூ.1400க்கு விற்பனையாகும் என கணக்கிடப்பட்டுள்ளது. இதேபோல் சோளம் ரூ.19 / கிலோ, எள் ரூ.8700 / கிலோ, நிலக்கடலை கிலோ ரூ.4300க்கும், இப்பட்டத்தில் நடவு செய்யப்படும் சின்ன வெங்காயம் அறுவடைக்கு வரும். அக்டோபர் மாதம் முதல் நவம்பர் மாதம் வரை உள்ள காலகட்டத்தில் ஒரு கிலோ 22 ரூபாய் முதல் 25 ரூபாய் வரை விற்பனையாக வாய்ப்புள்ளன. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் வெளியிட்டுள்ளது. - டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

## <u>முள் இல்லா மூங்கில் சாகுபடிக்கு மானியம்</u>

தோட்டக்கலை அதிகாரி தகவல்: உடுமலைப்பேட்டையில் தேசிய மூங்கில் இயக்கத் திட்டத்தின் கீழ் முள் இல்லா மூங்கில் சாகுபடியை ஊக்குவித்து மானிய உதவிகள் வரப்பெற்றுள்ளது. ஒரு எக்டேருக்கு ரூ.8000/- மான்யமாக தரும் உன்னத மூங்கில் திட்டம் மூலம் இயற்கை வேளாண் உத்தியான காற்று தடுப்பான் மற்றும் உயிர்வேலி மூலம் உபரி வருமானம் உயிர்க்குலங்கள் பல்கிப் பெருகிட கீழே விடும் மூங்கில் இலைகள் மூலம் வாய்ப்பு மற்றும் கால்நடை வளர்ப்புக்கு பெரும் உதவி, மண்ணின் பௌதிகத்தன்மை, நீர்ப்பிடிப்புத் திறன் அதிகரிப்பு போன்ற ஏராளமான நன்மைக்கு வழி உள்ளது. விவசாயிகள் தனது சொந்த

செலவில் கன்றுகளைப் பெற்று வாங்கி நட்டு அதன் புகைப்படம், சிட்டா, அடங்கல், ரேஷன்கார்டு மற்றும் விண்ணப்பம் தந்து மூங்கில் சாகுபடி மானியம் பெற டாக்டர் பா.இளங்கோவன், தோட்டக்கலை உதவி இயக்குனர், உடுமலை, அவர் தெரிவித்துள்ளார். மேலும் கூறுகையில், நட்ட 3ம் ஆண்டு முதல் அறுபது ஆண்டுகள் தொடர்ந்து ஆண்டுதோறும் ஒரு ஏக்கரில் குறைந்தது ஒரு லட்சம் ரூபாய் மதிப்புடைய தரமான மூங்கில் வளர்த்து அறுவடை செய்து உயர்நிலை அடையலாம். மூங்கில் கன்றுகள் குறித்து மேலும் விவரம் பெற 98420 07125 எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>கலசபாக்கம் வட்டத்தில் விவசாயிகளுக்கு விதை நெல் தாராளம் உதவி இயக்குனர் தகவல்</u>

கலசபாக்கம்,: கலசபாக்கம் வட்டக்கில் விவசாயிகளுக்கு விகை நெல் காராளமாக இருப்பு உள்ளதாக வேளாண்மை உதவி இயக்குனர் கூறினார். இது குறித்து வேளாண்மை உதவி இயக்குனர் சுந்தரம் கூறியதாவது: கலசபாக்கம் வட்டக்கில் இந்த பருவத்துக்கு விவசாயிகளுக்கு தேவையான விதைநெல்கள் போதுமான அளவு இருப்பில் உள்ளது. நீண்டகால பயிரான பொன்னி, குறுகிய கால பயிர்களான ஏ.டி.டி.43,45, 737 ஆகிய ரகங்கள் இருப்பில் உள்ளது. எனவே விவசாயிகள் வேளாண்மை விரிவாக்க மையத்தில் தேவையான இருப்பு உள்ளதால் விதை நெல் வாங்கிச்செல்லலாம். மேலும் ஏ.டி.டி.43, 45,737 ஆகிய ரகங்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.5 மானியம் வழங்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

### <u>ஏற்காட்டில் பரவலாக மழை</u>

ஏற்காடு, : ஏற்காட்டில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் மாலை 3 மணி முதல் 6 மணி வரை ஏற்காடு பகுதியில் மழை பெய்தது. இதனால், ஏற்காட்டில் மிதமான சீதோஷண நிலை நிலவுகிறது. ஏற்காடு ஏரி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் உள்ள கிணறுகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக, கடந்த சில மாதங்களாக ஏற்காடு பகுதியில்

நிலவிய குடிநீர் தட்டுப்பாடு சீரடைந்தது. நேற்று ஏற்காடு மற்றும் சுற்றுப்பகுதியில் 4வது நாளாக பரவலாக மழை பெய்தது. இதனால், காபி நாற்று நடவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## <u>நெல் வயலில் களை எடுக்கும் பணி தீவிரம்</u>

கோபி, : கோபி மற்றும் சுற்றுப்புற பகுதியில் உள்ள நெல் வயலில் களை எடுக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. கோபி மற்றும் சுற்றுப்புற பகுதியில் கடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன வாய்க்கால் பகுதியில் கடந்த மாதம் முதல்போக சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. அதைத்தொடர்ந்து கடந்த ஒரு மாதமாக நாற்றங்கால் விடும் பணி, நடவு பணிகள் நடைபெற்றது. தற்போது கோபி மற்றும் சுற்றுப்புற பகுதியில் பெருமளவு நடவு பணிகள் முடிவுற்ற நிலையில் தற்போது வயலில் களையெடுக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக விவசாய தொழிலாளர்கள் பற்றாக்குறை உள்ளதால் களை எடுக்கும் பணிக்கும் ஆட்கள் கிடை க்காத நிலையே ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர். கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு தொழிலாளர்களின் சம்பளம் கணிசமாக உயர்ந்திருந்தாலும், ஆட்கள் பற்றாக்குறை உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். ஒற்றை நாற்று நடவு முறையில் பயிரிட்டுள்ள விவசாயிகள் கோணாவீடர் கருவி மூலம் ஒரு தொழிலாளி ஒரு நாளைக்கு சுமார் அரை ஏக்கர் வரை களை எடுக்க முடியும். ஆனால் அதற்கு தகுந்தாற்போல் சமதரையுடன் கூடிய நிலத்தில் மட்டுமே ஒற்றை நாற்று நடவு முறை செயல்படுத்த முடியும் என்பதால் அதில் விவசாயிகள் ஆர்வம் காட்டாமல் இருந்து வருகின்றனர்.

## <u>கடவூர் பகுதியில் 100 சதவீத மான்யத்தில் கருவேப்பிலை கன்றுகள்வேளாண்அதிகாரி தகவல்</u>

கடவூர்,: கடவூர் பகுதியில் விவசாயிகளுக்கு 100 சதவீத மான்யத்தில் கருவேப்பிலை கன்றுகள் விநியோகம் செய்யப்படவுள்ளது. இது குறித்து தோட்டக்கலை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளதாவது; தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பல்வேறு திட்டப் பணிகள் நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்பட உள்ளது. அதில் ஒரு பகுதியாக 100 சதவீத மான்யத்தில் அதாவது தொகை வசூல் செய்யாமல் கருவேப்பிலை கன்றுகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படவுள்ளது. கடவூர் வட்டார விவசாயிகள் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளு மாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பிற பயிர்கள் போல ஏக்கர் கணக்கில் கருவேப்பிலை கன்றுகள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மட்டும் மான்யம் வழங்கப்படும் . தற்போது கருவேப்பிலை உபயோகம் அதிகரித்து வருவதால் அதன் சாகுபடி மூலம் விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைக்க வாய்ப்பு

உள்ளது. இதனை கருத்தில் கொண்டு கடவூர் விவசாயிகள் பயன்பெறும் வகையில் நடப்பு ஆண்டில் இத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. கன்றுகள் தேவைப்படும் விவசாயிகள் சிட்டா, அடங்கல் போன்றவை களை தயார் நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும். மேலும் விபரங்களுக்கு கடவூர் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணு குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு தோட்டக்கலை உதவி இயக்குநர் வீரமணி தெரிவித்துள்ளார்.

## சம்பா சாகுபடிக்கான முன்னேற்பாடுகள் தயார் கலெக்டர் தகவல்

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை மாவட்டத்தில் சம்பா சாகுபடிக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளது என்று கலெக்டர் மனோகரன் தெரிவித்துள்ளார். புதுக்கோட்டை கலெக் டர் முகாம் அலுவலகத்தில் வேளாண் துறையின் சார் பில் சம்பா முன்பருவ முனைப்பு இயக்கம் நடத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தை கலெக்டர் மனோகரன் துவக்கி வைத்து பேசியதாவது: தமிழக அரசு டெல்டா பாசனத்திற்காக காவிரியிலிருந்து தண்ணீர் திறந்து விட்டதை யடுத்து மாவட்டத்தில் டெல்டா பாசன பகுதிகளான அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி, திருவரங்குளம், கந்தர்வக்கோட்டை, கறம்பக்குடி ஆகிய வட்டாரங்களில் உள்ள பாசனப் பகுதிகளில் 28 ஆயிரம் எக்டர் பரப்பளவில் சம்பா சாகுபடி செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனை விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வேளாண்மைத்துறையின் சார்பில் டெல்டா பகுதிகளில் உள்ள அனைத்து கிராமங்களிலும் சம்பா முன்பருவ முனைப்பு இயக்கம் நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. விவசாயிகள் சம்பா பயிர் சாகுபடி செய்வதற்கு ஏற்ப போதுமான அளவு தரமான சான்று பெற்ற விதைகள், உரங்கள், உயிர் உரங்கள், நுண்சத்து உரங்கள் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள் ளது. விவசாயிகளுக்கு பயிர்கடன் தாமதமின்றி வழங்க கூட்டுறவுத்துறை மற்றும் முன்னோடி வங்கிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. டெல்டா பகுதிகளில் உள்ள பாசன வாய்க்கால்கள், கண்மாய்களை போர்க்கால அடிப்படையில் தூர்வார பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. விவசாயிகள் பயிர் சாகுபடி செய்வதற்கு ஏற்ற வகையில் டிராக்டர், ரோட்டவேட்டர், நடவு செய்யும் இயந்திரம், விதை விதைக்கும் இயந்திரம் ஆகியவற்றை தயார் நிலையில் வைத்திருக்க வேளாண் பொறியியல் துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மின் இணைப்பு பழுதுகளை உடனடியாக சரிசெய்து தங்குதடையின்றி விவசாயத்திற்கு மின்சாரம் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ள மின்வாரியத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் நமது மாவட்டத்தில் விவசாயிகள் சம்பா சாகுபடியை மேற் கொள்ள மாவட்ட நிர் வாகத்தின் சார்பில் அனை த்து வகையான முன்னேற் பாடு நடவடிக்கைகள் தயார் நிலை யில் வைக்கப்பட்டுள்ளன. இதனை

விவசாயிகள் உரிய முறையில் பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை பெருக்கி பயனடைய வேண்டும் என்றார். முன்னதாக குடுமியான்மலையில் புதிதாக வேளாண் கல்லூரி மற்றும் வேளாண் ஆராய்ச்சி நிலை யம் அமைப்பதற்கு அனுமதி வழங்கிய முதல்வருக்கு மாவட்ட மக்களின் சார்பில் கலெக்டர் நன்றி தெரிவித்தார். இக்கூட்டத்தில மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சந்தோஷ்குமார், துணை இயக்குநர்(வேளாண்) பாலன், கலெக்டரின் நேர் முக உதவியாளர் (வேளாண்) நாகேந்திரன், உதவி செயற்பொறியா ளர்(வேளாண் பொறியியல்) சிதம்பரம், பாதுப்பணித் துறை செயற்பொறியாளர் பஞ்சமூர்த்தி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**<u>அவல்பூந்துறை ஒழுங்குமுறை கூடத்தில் கொப்பரை, தேங்காய், நிலக்கடலை ரூ.1 கோடியே 5 லட்சத்துக்கு ஏலம்</u>**

மொடக்குறிச்சி,: அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் தேங்காய், கொப்பரை மற்றும் நிலக்கடலை ரூ.1 கோடியே 5 லட்சத்துக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கொப்பரை தேங்காய் ஏலத்திற்கு 1,957 மூட்டைகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. இதில் முதல் தரம் கொப்பரை கிலோ ரூ.129.15 முதல் 112.85 வரையும் இரண்டாம் தரம் கிலோ ரூ.96.55 முதல் 128 ரூபாய் வரையும் விற்பனை செய்யப்பட்டது. இதன் மொத்த மதிப்பு 99 லட்சத்து 75 ஆயிரம் வரை விற்பனை செய்யப்பட்டது. கொப்பரைத் தேங்காய் ஏலத்தில் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து 267 விவசாயிகள் கலந்து கொண்டனர். அதேபோல 38 ஆயிரத்து 883 தேங்காய்கள் விற்பனைக்கு வந்திருந்தது. இதில் தேங்காய் ஒன்று ரூ.4.25 முதல் 14.35 வரை ஏலம் போனது. மொத்தம் ரூ.4 லட்சத்து 53 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டது.90 மூட்டை நிலக்கடலை ஏலம் விடப்பட்டது. இதில் குவிண்டால் ஒன்றுக்கு அதிகபட்ச விலையாக 4 ஆயிரத்து 609 ரூபாயும், குறைந்தபட்சம் 3 ஆயிரத்து 529 ரூபாயும் ஏலம் போனது. மொத்தம் ஒரு லட்சத்து 24 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டது.மேலும் வரும் 15ம் தேதி வெள்ளிக்கிழமை சுதந்திர தினம் என்பதால் அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்ப னை கூடத்திற்கு விடுமுறை அளி‘கப்பட்டுள்ளதாக விற்பனைக் கூட கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### கரூர் மாவட்டத்தில் "கால் நடைகளுக்கு கோமாரி நோய் இல்லையென்ற நிலையை உருவாக்க வேண்டும்" கலெக்டர் பேச்சு

கரூர் மாவட்டத்தில் கால் நடைகளுக்கு கோமாரி நோய் இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்று கலெக்டர் ஜெயந்தி கூறினார். ஆலோசனைகூட்டம்

கரூர் மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை மூலம், கோமாரி நோய் தடுப்பு குறித்த ஆலோசனை கூட் டம் நடைபெற்றது. கரூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற இந்த கூட்டத்திற்கு கலெக்டர் ஜெயந்தி தலைமை தாங்கி பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:– கரூர் மாவட்டத்தில் உள்ள ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி என அனைத்து பகுதிகளிலும் ஒரு கால் நடை கூட விடுபடாத அளவிற்கு 100 சதவீதம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி வழங்க வேண்டும். அதற் காக தான் இந்த கூட்டம் நடத்தப்படுகிறது. அத ற்கு ஏற்ற வாறு, கால் நடை பராமரிப்பு துறை அலுவலர்கள் திட்ட மிட்டு சிறப்பாக பணி யாற்ற வேண்டும். தகவல் தெரிவிக்க வேண்டும் அதே போன்று ஒவ்வொரு பகுதியிலும் கால் நடை சிறப்பு முகாம் நடத்துவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாகவே அந்தந்த பகுதி பொது மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். அது மட்டும் இன்றி முகாம் நடைபெறுவதற்கு முதல் நாள் தண்டோரா மூலம் அந்த பகுதி மக்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். மேலும் அந்தந்த பகுதி கால்நடை டாக்டர்கள், தங்கள் பகுதியில் உள்ள கால் நடைகளின் எண்ணிக்கை குறித்து பதிவேடு பராமரித்து வரவேண்டும். கால்நடை பராமரிப்பு துறையுடன் வரு வாய்த்துறை, ஊரக வளர்ச்சி துறை, பேரூராட்சி துறை ஆகிய துறைகள் ஒருங்கிணைந்து செயல்பட்டு, 100 சதவீதம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டு, கரூர் மாவட்டத்தில், கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்குதல் இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறி னார். கூட்டத்தில் கால் நடை பராமரிப்பு துறை இணை இயக்குனர் டாக்டர் தங்கராசு, உதவி இயக்குனர் டாக்டர் குழந்தைசாமி உள்பட அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

**<u>வேளாண் துறை அறிவுரைப்படி பண்ணை வருமானத்தை பெருக்கிய விவசாயிகள், குழுக்களுக்கு பரிசு கலெக்டர் நந்தகுமார் வழங்கினார்</u>**



ராமநாதபுரம், வேளாண்மை துறை அறிவுரைப்படி பண்ணை வருமானத்தை பெருக்கிய முன்னோடி விவசாயிகள் மற்றும் விவசாய குழுக்களுக்கு ஊக்கப் பரிசினை கலெக்டர் நந்தகுமார் வழங்கினார்.

<u>ஊக்கப்பரிசு</u>

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், விவசாய உற்பத்தியை 2 மடங் காக்கிடவும், பண்ணை வருமானத்தை 3 மடங்காக உயர்த்தவும் அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. விவசாயிகளின் பண்ணை வருமானத்தை பெருக்கிட வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் கால் நடை வளர்ப்பு போன்ற இனங்களில் ஒருங்கிணைந்த பண்ணையம் முறையில் செயல்படுத்தி புதிய தொழில் நுட்பங்களை பின்பற்றி வரு மானத்தை பெருக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகிறது. கடந்த 2013–14ம் ஆண்டு ராமநாதபுரம் மாவட்டத்தில் வேளாண்மை மற்றும் சார்பு துறை தொழில் நுட்ப அறிவு ரைகளை பின்பற்றி பண்ணை வருமானத்தை பெருக்கிய முன்னோடி விவசாயிகளில் வட்டாரத்துக்கு 2 பேர் வீதம் 22 பேர் தேர்வு செய்யப்பட் டனர். இவர்களுக்கு வேளாண் விரிவாக்க துணை இயக்கம் மூலம் தலா ரூ.10,000 வீதம் ஊக்கப்பரிசாக 22 விவ சாயிகளுக்கு ரூ.2 லட்சத்து 20 ஆயிரம் வழங்கப்பட்டது.

<u>குழுக்கள்</u>

இதேபோல வேளாண்மை துறை வழிகாட்டுதலின்படி சிறப்பாக செயல்பட்ட பர மக்குடி, முதுகுளத்தூர், கமுதி, கடலாடி ஆகிய வட்டா ரங்களில் உள்ள குழுக்களை

ஆவணங்கள் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டது. இதன்படி பரமக்குடி யூனிய னில் சுந்தனேந்தல் அட்மா மகளிர் நெல் விவசாய குழு, முதுகுளத்தூர் யூனியனில் வெங்கலக்குறிச்சி அட்மா விவ சாயிகள் ஆர்வலர் குழு, கமுதி யூனியனில் மேட்டுப்பட்டி முத்தமிழ் அல்லி சுய உதவி குழு, கட லாடி யூனியன் கடுகு சந்தை விநாயகர் சுய உதவி குழு ஆகியவற்றுக்கு ஊக்கத் தொகையாக தலா ரூ.20,000 ஆயிரம் வீதம் வழங்கப்பட்டது. இந்த விவசாயிகள் மற்றும் விவசாய குழுக்களுக்கு மாவட்ட கலெக்டர் நந்தகு மார் பரிசுத்தொகைக்கான காசோலைகளை வழங்கி பாராட்டினார். நிகழ்ச்சியில் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் கிருஷ்ண மூர்த்தி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் கனகராஜ், வேளாண்மை துணை இயக் குனர் உதுமான் முகைதீன், வேளாண் உதவி இயக்குனர் சேக் அப்துல்லா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## <u>அரிசி உணவை குறைத்துக்கொண்டு சிறு தானியங்களை அதிகம் சாப்பிட்டால் ஆரோக்கியமாக வாழலாம் கலெக்டர் ராஜாராமன் பேச்சு</u>

சிவகங்கை, அரிசி உணவை குறைத்துக்கொண்டு சிறு தானியங்களை அதிகமாக சாப்பிட்டால் ஆரோக்கியமாக வாழலாம் என்று கலெக்டர் ராஜாராமன் கூறினார்.

உற்பத்திதிறன்

சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியம் ஒடுவன்பட்டி கிராமத்தில் வேளாண்மைத் துறையின் சார்பில் நவீன தொழில்நுட்பம் குறித்த விழிப்புணர்வு முகாம் நடந்தது. இதற்கு தலைமை தாங்கி மாவட்ட கலெக்டர் ராஜாராமன் பேசும்போது கூறியதாவது:–

தமிழக முதல்–அமைச்சர் வேளாண்மைத் துறையில் மறுமலர்ச்சி ஏற்படுத்தி விவசாயத்தை ஒரு தொழிலாக உருவாக்கித் தந்துள்ளார். இந்த பகுதி மக்கள் குறைந்த அளவு தண்ணீரில் சாகுபடி செய்யக்கூடிய சோளம், கம்பு, மக்காச்சோளம், குதிரைவாலி போன்ற சிறு தானியங்களை பயிர் செய்து உற்பத்தித் திறனை பெருக்க வேண்டும். அத்துடன் எந்திரங்கள் மூலம் விதைப்பு மற்றும் நிலக்கடலை உடைத்தல் போன்ற விவசாய பணிகள் மேற்கொள்வது தொடர்பான தொழில் நுட்ப உத்திகள் குறித்து தெரிந்து கொண்டு செயல்பட வேண்டும். நமது முன்னோர்கள் அரிசி உணவைக் குறைத்துக்கொண்டு இரும்புச்சத்து, நார்ச்சத்து, மாவுச்சத்து உள்ள தானியங்களை அதிக அளவில் பயன்படுத்தியதால் உடல் ஆரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழ்ந்தனர். பொருளாதாரம் உயரும் எனவே வருங்கால சந்ததியினர் சிறுதானியங்களை அதிக அளவில் பயன்படுத்தி ரத்த அழுத்தம், சர்க்கரை நோய் ஆகியவற்றில் இருந்து பாதுகாத்து ஆரோக்கியத் துடன் வாழலாம். பெண்கள் விவசாயத்துடன் நின்று விடாமல் விவசாயத்துடன் தொடர்புடைய கறவை மாடுகளை வளர்த்து பால்

உற்பத்தியை அதிகரித்து பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளலாம். சாகுபடி தொடர்பாக பிரச்சினைகள் இருந்தால் அதுகுறித்து விவசாயிகள் செட்டிநாடு மானாவாரி வேளாண்மை அறிவியல் மையத்தை தொடர்பு கொள்ள வேண்டும். அவர்களது ஆலோசனையின்படி சாகுபடி பணிகளை மேற்கொள்ளலாம். உற்பத்தி செய்யும் பொருட்களை தமிழ்நாடு வேளாண்மை வணிகத் துறையின் மூலம் எங்கு சந்தை உள்ளது என்பதை தெரிந்து கொண்டு விற்பனை செய்வதால் அதிக வருமானம்பெறலாம்.

ஆராய்ச்சிநிலையம்

செட்டிநாடு ஆராய்ச்சி மையத்தில் ரூ.50 லட்சம் மதிப்பில் உணவு பதப்படுத்தும் ஆராய்ச்சி நிலையம் தொடங்கப்பட்டு விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் அதனை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## <u>வேளாண் அதிகாரிகள் ஆய்வு</u>



சங்கரன்கோவில் வட்டாரத்தில், கீழவயலி கிராமத்தில் அமைந்த உள்ள பருத்தி சான்று விதை பண்ணையை நெல்லை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சந்திரசேகரன் ஆய்வு செய்தார். விதை, வயல்தரம், பயிர்நிலை மற்றும் விதை பருத்தி கொள்முதல் குறித்து கேட்டறிந்தார். மேற்படி விதை பண்ணை வயலில் இருந்து விதைகள் விடுபடாமல் கொள்முதல் செய்திட அறிவுறுத்தினார். கரிவலம்வந்தநல்லூர் வேளாண்மை விரிவாக்க மையத்தினை ஆய்வு செய்து களப்பணியாளர்களிடம் திட்ட செயல்பாடுகள் குறித்து அறிவுரை வழங்கினார். ஆய்வில் சங்கரன்கோவில் வேளாண்மை உதவி இயக்குனர் ஜெயசெல்வின் இன்பராஜ், வேளாண்மை அலுவலர் விஜயலட்சுமி, துணை வேளாண்மை அலுவலர் ரவிச்சந்திரன், உதவி விதை அலுவலர்கள் ராஜகுமாரசாமி, ரங்கசாமி

மற்றும் நவநீதன் உதவி வேளாண்மை அலுவலர், அன்பழகன் ஆகியோர் உடன் இருந்தனர்.

## <u>பேரிச்சை மரங்களை தோட்டக்கலை துறையில் சேர்க்கவேண்டும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் தீர்மானம்</u>

உடுமலையில் தமிழ்நாடு பேரிச்சை விவசாயிகள் சங்க தொடக்க விழா மற்றும் கூட்டம் நடைபெற்றது. சங்க மாநில கவுரவ தலைவராக எஸ்.நிஜாமுதீன் (தர்மபுரி), மாநில தலைவராக கங்காதரன் (உடுமலை) செயலாளராக மணிகண்டன் (நல்லாம்பள்ளி), பொருளாளராக சின்னசாமி (நாமக்கல்), துணை செயலாளராக ரவி (கோவை) ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தமிழ்நாடு அரசு பழ பயிர்களான மா, திராட்சை, வாழை போன்றவை தோட்டக்கலை துறையில் சேர்க்கப்பட்டுள்ளது. தற்போது தமிழ்நாட்டின் சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப உயர்வகை பேரிச்சை மரங்கள் பயிரிடப்படுகிறது. அதிக சத்துகளும், ஆரோக்கியமுமான பேரிச்சை மரங்களை தமிழ்நாடு அரசு தோட்டக்கலை துறையில் சேர்க்கவேண்டும். குஜராத், ராஜஸ்தான் போன்ற மாநிலங்கள் பேரிச்சை பயிரிடும் விவசாயிகளுக்கு மானியங்கள் கொடுத்து வருவது போல், தமிழக அரசும் மானியம் வழங்க வேண்டும். பேரிச்சை பழத்தை பாதுகாக்கவும், பதப்படுத்தவும் குளிர்பதன கிடங்குகளை அமைத்து தர தமிழக அரசை கேட்டுக்கொள்வது என்பது உள்ளிட்ட பல தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

## <u>விவசாயிகள் நலனை கருத்தில் கொண்டு கோழி இறைச்சி மீதான இறக்குமதி வரியை மத்திய அரசு ரத்து செய்யக்கூடாது உழவர் உழைப்பாளர் கட்சி மாநில தலைவர் பேட்டி</u>

தாராபுரம், விவசாயிகள் நலனை கருத்தில் கொண்டு கோழி இறைச்சிகள் மீதான இறக்குமதி வரியை மத்தியஅரசு ரத்து செய்யக்கூடாது என்று உழவர் உழைப்பாளர் கட்சி மாநில தலைவர் கு.செல்லமுத்து கூறினார்.

<u>ஆலோசனை கூட்டம்</u>

உழவர் உழைப்பாளர் கட்சி ஆலோசனை கூட்டம் தாராபுரத்தில் நேற்று நடைபெற்றது. இந்த கூட்டத்தில் கலந்து கொள்ள வந்த உழவர் உழைப்பாளர் கட்சி மாநில தலைவர் கு.செல்லமுத்து நிருபர்களிடம் கூறியதாவது:–

அமெரிக்கா, இத்தாலி, ஜெர்மனி உள்பட பல்வேறு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கோழி இறைச்சிகளுக்கு மத்திய அரசு 150 சதவீதம் இறக்குமதி வரியை விதித்து இருந்தது. தற்போது அந்த வரியை முற்றிலும் நீக்கப்போவதாக மத்திய அரசு பரிசீலித்து வருவதாக தகவல் தெரியவந்துள்ளது. கோழி இறைச்சிக்கான இறக்குமதி வரியை நீக்கினால் மேலை நாடுகள் அனைத்தும் கெட்டுப்போன கோழி இறைச்சிகளை கொண்டு வந்து விற்பனை செய்யும் களமாக இந்தியாவை பயன்படுத்துவார்கள். இதனால் இந்தியாவில் கோழிப்பண்ணை நடத்துபவர்களின் நிலைமை மிகவும் மோசமாகி விடும். கோழிப்பண்ணை தொழில் அழிந்துவிடும். எனவே மத்திய அரசு கோழி இறைச்சிகள் மீதான இறக்குமதி வரியைரத்துசெய்யக்கூடாது.

நிறுத்திவைக்கவும்

விவசாயிகள் தங்களது நிலத்தில் பாசனத்திற்காக திறந்து வெளி கிணறு, ஆழ்துளை கிணறு, ஆழ்குழாய் கிணறு அமைக்க வேண்டும் என்றால் நிர்வாக அனுமதி பெற வேண்டும் என்று சட்டம் கொண்டு வர தமிழக அரசு முடிவு செய்துள்ளது. நிர்வாக அனுமதி என்றால் யார்? கிராம நிர்வாக அலுவலரா? ஒன்றியக்குழு தலைவரா? தாசில்தாரா? அல்லது ஆர்.டி.ஓ.வா? என்பதை தெளிவாக தெரிவிக்கவில்லை. மேலும் இது போன்ற புதிய நிபந்தனை ஊழலுக்கும், லஞ்சத்திற்கும் வழிவகுக்கும். இந்த புதிய சட்டமானது விவசாயிகளின் வாழ்வுரிமையை பறிப்பதாகும். எனவே இந்த சட்டத்தை நிறுத்தி வைக்க வேண்டும்.

<u>இழப்பீடு</u>

தாராபுரம் அருகே உள்ள உப்பாறு அணைக்கு புதிய வாய்க்கால் வெட்டும் பணிக்கு நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. எனவே கையகப்படுத்தும் நிலத்திற்கு மார்க்கெட் மதிப்பில் இழப்பீடு வழங்க வேண்டும். பச்சிளம் குழந்தைகள் குடிக்கும் பாலில் நுரை வருவதற்காக ரசாயனங்களை கலப்பது கவலை அளிக்கிறது. இந்த பாதக செயல்களில் ஈடுபடுவோரை கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். பேட்டியின் போது மாவட்ட செயலாளர் ஈஸ்வர மூர்த்தி, ஒன்றிய செயலாளர் பழனிசாமி மற்றும் பலர் உடன் இருந்தனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## இன்றைய வேளாண் செய்திகள்

## லாபம் தரும் மரவள்ளி கிழங்கு சாகுபடி



ஜவ்வரிசி, சேமியா, நூடுல்ஸ் போன்ற உணவுப் பொருள்களுக்கான மூலப் பொருளாக மரவள்ளிக் கிழங்கு திகழ்கிறது. மேலும், தொழிற் சாலைகளில் உற்பத்தியாகும் பல பொருள்களுக்கும் மரவள்ளிக் கிழங்கிலிருந்து தயாரிக்கப்படும் ஸ்டார்ச்சு பவுடர் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக மாத்திரைகளின் மேல்புறத்தில் உள்ள வெண்மை நிற கோட்டிங் மரவள்ளிக் கிழங்கின் ஸ்டார்ச்சு பவுடரைக் கொண்டே தயாரிக்கப்படுவதாக வேளாண் நிபுணர்கள் கூறுகின்றனர். இவ்வாறு பல்வேறு பயன் பாடுகளுக்காக மரவள்ளிக் கிழங்கின் தேவை நாளுக்கு நாள் அதிகரிப்பதாகவும், அதனால் மரவள்ளிக் கிழங்கு சாகுபடி செய்யும் விவசாயிகள் நல்ல லாபம் ஈட்டி வருவதாகவும் கூறப்படுகிறது. இது குறித்து சேலம் மாவட்டம் ஏத்தாப்பூரில் உள்ள மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையத்தின் பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் எம்.செந்தில்குமார் கூறியதாவது: ``சேலம், நாமக்கல், விழுப்புரம், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட் டங்களில் மரவள்ளிக் கிழங்கு அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. நீர் தேங்காத, காற்றோட்டமுள்ள மண் வகைகள் அனைத்தும் மரவள்ளி சாகுபடி செய்ய ஏற்றவை ஆகும். இதனால் தற்போது தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, சிவகங்கை என பல மாவட்டங்களுக்கும் மரவள்ளி சாகுபடி பரவலாகி வருகிறது. 10 மாத பயிரான மரவள்ளி சாகுபடியில் மற்ற பயிர்களை விட பராமரிப்பு செலவு குறைவு. அதே நேரத்தில் அதிக லாபம் கிடைக்கும். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் அறிமுகம் செய்த

ஏத்தாப்பூர் 1 என்ற மரவள்ளிக் கிழங்கை கடந்த ஆண்டு சாகுபடி செய்த விவசாயிகளுக்கு நல்ல மகசூல் கிடைத்து, பெரும் லாபம் சம்பாதித்தனர். மாவுப்பூச்சி உள்ளிட்ட சில வகை பூச்சிகளின் தாக்குதல் மரவள்ளியில் இருக்கும். எனினும் அவற்றை எளிமையான முறைகளில் கட்டுப்படுத்தி விடலாம். இறவைப் பாசனம் எனில் கார்த்திகை, மார்கழி மாதங்களிலும், மானாவரிப் பாசனம் எனில் சித்திரை, வைகாசி மாதங்களிலும் ஏத்தாப்பூர் 1 மரவள்ளி நடவு செய்யலாம்" என்கிறார் செந்தில்குமார். திருவாரூர் மாவட்டம் மன்னார் குடி அருகேயுள்ள ஓவேல்குடி கிராமத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியரான எம்.செல்வநாதன், கடந்த 15 ஆண்டுகளாக மரவள்ளி சாகுபடி செய்து வருகிறார். நெல் உள்ளிட்ட பிற பயிர்களையும் சாகுபடி செய்து வரும் செல்வநாதன், "மற்ற பயிர்களை விட மரவள்ளி சாகுபடியில்தான் அதிக லாபம் கிடைக்கிறது" என்கிறார். "நான் நிலக்கடலையில் ஊடுபயிராகத்தான் மரவள்ளி சாகுபடி செய்து வருகிறேன். முதல் மூன்று மாதத்தில் நிலக் கடலை மகசூலுக்கு வந்து விடும். அதுவரை மரவள்ளிக்கென தனியாக எந்த பராமரிப்பு செலவும் தேவையில்லை. நிலக்கடலை மகசூல் எடுத்த பிறகுதான், மரவள்ளிக்கென தனியாக பார் அமைத்து உரமிட வேண்டும். அதன் பிறகு 15 நாளைக்கு ஒருமுறை தண்ணீர் விட்டால் போதுமானது. இடையே மழை பெய்து விட்டால் அதுவும் தேவையில்லை. 10-வது மாதத்தில் மரவள்ளிக் கிழங்கு அறுவடைக்கு வந்துவிடும். கடந்த ஆண்டு நான் 4 ஏக்கரில் மரவள்ளி சாகுபடி செய்திருந்தேன். ஏக்கர் ஒன்றுக்கு 15 டன் மகசூல் கிடைத்தது. கடந்த ஆண்டு ஒரு டன்னுக்கு அதிகபட்சமாக ரூ.15 ஆயிரம் வரை விவசாயிகளுக்கு விலை கிடைத்தது. நான் டன் ஒன்று ரூ.11 ஆயிரம் என்ற விலையில் விற்பனை செய்தேன். கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் விலை கிடைக் குமா எனத் தெரியவில்லை. எனினும் மற்ற பயிர்களை விட அதிக லாபம் கிடைக்கும் என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியும். நான் இந்த ஆண்டும் 4 ஏக்கரில் மரவள்ளி சாகுபடி செய்துள்ளேன். எனக்கு நிலக்கட லையால் கிடைக்கும் வருவாய் போக, மரவள்ளி சாகுபடியில் கிடைக்கும் வருவாயை கூடுதல் வருவாய் என்றே கருதுகிறேன். ஆத்தூர் பகுதியைச் சேர்ந்த ஆலைகளுக்கு மரவள்ளிக் கிழங்கை வாங்கிச் செல்கிறார்கள். நம் வயல்களுக்கே நேரடியாக வந்து மரவள்ளிக் கிழங்கை கொள்முதல் செய்ய பலர் உள்ளனர். மேலும் மரவள்ளிக் குச்சியைத் தான் நடவு செய்கிறோம். ஆகவே, அடுத்தடுத்த ஆண்டுகளில் விதைக் குச்சிக்காக நாம் மற்றவர்களை சார்ந்திருக்க வேண்டியதில்லை. நம்மிடம் உள்ள குச்சிகளையே சிறு துண்டு களாக நறுக்கி அடுத்த ஆண்டில் நடவு செய்யலாம். இதுதவிர பெருமளவில் குவியும் மரவள்ளி குச்சிகள் எரிபொருளாக பயன்படுகிறது. மரவள்ளி இலைகள் நம் கால் நடைகளுக்கு பசுந்தீவன மாகிறது. ஆக, பல்வேறு வகைகளில் மரவள்ளிக்

கிழங்கு சாகுபடி லாபம் தருவதாக உள்ளது" என்கிறார் செல்வநாதன். மரவள்ளி சாகுபடி தொடர்பான தனது அனுபவங்களை மற்றவர் களுடன் பகிர்ந்து கொள்ள செல்வநாதன் தயாராக உள்ளார். மேலும் விவரங்களுக்கு 94863 36342 என்ற செல்போன் எண்ணில் அவரை தொடர்பு கொள்ளலாம். அதேபோல் மரவள்ளி சாகுபடி தொடர்பான தொழில்நுட்ப ரீதியான ஆலோசனைகளுக்கு 99760 99191 என்ற எண்ணில் உதவிப் பேராசிரியர் செந்தில் குமாருடன் பேசலாம்.

## <u>மகசூலை அதிகரிக்கும் தென்னை டானிக்</u>

தென்னை பயிரிடும் விவசாயிகளுக்கு குறைந்த செலவில் அதிக பயனளிக்கும் விதத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் தென்னை டானிக் என்ற புதிய தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்துள்ளது. இது குறித்து பாளையங் கோட்டையிலுள்ள பல்கலைக்கழகத்தின் வேளாண்மை உதவி மைய உதவி பேராசிரியர் முனைவர் சி. ராஜா பாபு கூறியதாவது: தென்னை டானிக் ஊட்டப்பட்ட மரங்களில் குரும்பை உதிர்வது குறைந்து காய்களின் எண்ணிக்கை அதிகரித்து, காய்களின் பருமனும் தரமும் அதிகரிக்கிறது. தென்னை டானிக்கில் நைட்ரஜன், பொட்டாசியம், மக்னீசியம், இரும்பு, துத்தநாகம், தாமிரம், மாங்கனீசு, போரான் மற்றும் மாலிப்பிடினம் ஆகிய மரத்திற்கு தேவையான ஊட்டச் சத்துக்கள் சரியான விகிதத்தில் கலந்துள்ளன. இந்த டானிக் மூலம் மரத்துக்குத் தேவையான நுண்ணூட்டச் சத்துக்கள் சரியான விகிதத்தில் நேரடியாக மரத்திற்குள் செலுத்த முடிகிறது. மேலும், நோய், பூச்சி தாக்குதல் மற்றும் வறட்சி ஆகியவற்றை எதிர்கொள்ளும் இயற்கையான எதிர்ப்பு சக்தியும் மரத்தில் அதிகரிக்கிறது. மரத்திலிருந்து மூன்று அடி தள்ளி மண்ணை தோண்டி யெடுத்து, பென்சில் கனமுள்ள வெள்ளைநிற உறிஞ்சும் வேர் ஒன்றை தேர்வு செய்து வேரின் நுனியை மட்டும் சாய்வாக சீவி விடவேண்டும். பின்னர், டானிக் உள்ள பையின் அடிவரை வேரை நுழைத்து, வேரையும் பையின் மேல் பாகத்தையும் நூலால் கட்டி, டானிக் கீழே சிந்தாத வகையில், மண்ணை அணைத்து விட வேண்டும். மண்ணில் ஈரத்தன்மை குறைவாக இருந்தால் 12 மணிநேரத்துக்குள் டானிக்கை வேர் உறிஞ்சிவிடும். 6 மாதங்களுக்கு ஒருமுறை வேர் மூலம் டானிக் செலுத்தினால் மரங்கள் செழிப்பாக வளர்ந்து உயர் விளைச்சல் கொடுக்கும். ஒரு மரத்துக்கு 200 மி.லி. டானிக் தேவை. இந்த டானிக் பாலிதீன் பைகளின் மூலம் ரூ.10 என்ற விலையில் விற்கப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு 0462-2575552 என்ற தொலைபேசி எண்ணி லோ அல்லது 9171717832 என்ற செல்போன் எண்ணிலோ பாளையங்கோட்டை வேளாண் உதவி மையத்தை தொடர்பு கொள்ளலாம் என்றார் ராஜா பாபு.